**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 4/2020.**

**வழக்கு சாட்சி – அ.சா.11.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகானந்தம். | ஜாதி | |
| தந்தை பெயர் / கணவர் பெயர் | பிச்சையா. | தொழில் | காவல் ஆய்வாளர், நாகமலைப் புதுக்கோட்டை, மதுரை. |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 50/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.10.2024.

**(எதிரிகள் ஆஜர் இல்லை. (அவர்கள் ஆஜராவதிலிருந்து மாண்புமிகு மதுரை உயர்நீதிமன்றம் விலக்கு அளித்துள்ளது.) எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, மதுரை மாவட்டம், நாகமலைப்புதுக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.12.2018 ஆம் தேதியன்று நான் தேனி மாவட்டம், தேனி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் திரு. வெங்கடேச பிரபு என்பவரால் பதிவு செய்யப்பட்ட நிலையக் குற்ற எண். 880/2018, பிரிவுகள் 406, 420 இதச வழக்கின் விசாரணையை நான் எடுத்துக்கொண்டேன். இவ்வழக்கில் விசாரணை மேற்கொண்டு வழக்கின் புகார்தாரர் சுப்புராம் மற்றும் அவரது மனைவி விஜயலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 25.12.2018 ஆம் தேதியன்று வழக்குப் பதிவு செய்த சார்பு ஆய்வாளர் திரு. வெங்கடேச பிரபு

என்பவரை விசரித்து வாக்குமுலம் பதிவு செய்தேன். பின்னர் ஸ்ரீரெங்கபுரம் மத்திய வங்கியில் கிளார்க்காக பணிபுரிந்த சங்கரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அதே வங்கியில் மேலாளராகப் பணிபுரிந்து திரு. சுப்பிரமணிய பிள்ளை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வங்கியிலிருந்து புகார்தாரர் அடைமானம் வைத்து பத்திர எண். 4406/2002 ஆவணத்தை திரும்ப பெற்றுக் கொண்டதற்கான வங்கி மேலாளரின் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 17.01.2019 ஆம் தேதியன்று சாட்சிகள் முருகன், சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 20.03.2019 ஆம் தேதியன்று சாட்சிகள் சேதுராமன் மற்றும் பெருமாள் ஆகியோர்கள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 28.07.2019 ஆம் தேதியன்று வழக்கு தொடர்புடைய ஆவணங்களையும், சான்றிட்ட நகல்களையும் வழங்கக் கோரி தேனி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தேன். அன்றைய தினமே வழக்கில் தொடர்புடைய சர்வே எண். 29/6A மற்றும் 29/6E ஆகிய புல எண்களில் உள்ள நிலங்களின் விவரம்பற்றி வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் யாருக்கு அந்த நிலம் உரிமையுடையதுஎன்ற விபரத்தைம் தெரிந்துகொள்வதற்காக மேற்படி நிலங்களின் பட்டா, அடங்கல் மற்றும் "அ" பதிவேடு ஆகியவற்றின் சான்றிட்ட நகல்கள் வழங்கக் கோரியும் தேனி, வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்பிவைத்தேன். பின்னர் தேனி, சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து வழக்கு தொடர்புடைய சான்றிட்ட ஆவணங்களான 4402/2002, 6165/15, 3526/18, 3628/18, 6226/18 ஆகிய ஆவணங்கள் கிடைக்கப்பெற்று, ஆவணங்கள்

வழங்கிய சார் பதிவாளர் திரு. ஜெயபிரகாஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் எதிரிகள் அனைவரும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் முன்சாமீன் மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளார்கள். பின்னர் வழக்கின் விசாரணை முடிவில் வழக்கின் சட்டப் பிரிவு 406, 420 இதச–விலிருந்து பிரிவு 120 பி, 465, 468, 471, 406 மற்றும் 420 இதச–வின் பிரகாரம் சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து அதே பிரிவுகளின் கீழ் வழக்கின் எதிரிகளான ஜெகதீஸ், வனஜா, தாமஸ்ராஜ் மற்றும் சுதாகரன் ஆகியோர்கள் மீது குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.10 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

அ.சா.1 கொடுத்த புகாரானது தேனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்றதாகும். இவ்வழக்கின் குற்ற நிகழ்வு நாள் 01.06.2018 என்றால் சரிதான். 07.12.2018 ஆம்தேதி வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் காலதாமதாகக் கொடுக்கப்பட்ட காரணத்தை எனது விசாரணையில் புகார்தாரருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதால் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்ட விபரத்தை தெரிந்துகொண்டேன். அவருக்கு ஏற்பட்ட உடல்நிலை மற்றும் சிகிச்சை பெற்றது தொடர்பான ஆவணங்கள் எதையும் நான் பெறவில்லை. இந்த வழக்கின் புகார் கொடுப்பதற்கு முன்பாகவே புகார்தாரர் என்னிடம் 03.09.2018 ஆம் தேதி ஒரு புகாரை கொடுத்தார் என்றால் சரியல்ல. 03.09.2018 ஆம் தேதி தேனி காவல் நிலையத்தில் நான்தான் ஆய்வாளராகப் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். அ.சா.1, எதிரிக்கு பணம் கொடுக்க வேண்டியிருந்ததை நான் எனது விசாரணையில் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அ.சா.1. இன்

வாக்குமூலத்தில் 1வது எதிரிக்கு ரூ.4,00,000/– பாக்கி கொடுக்க வேண்டியுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்காக அ.சா.1–னிடம் எதிரி அதிகார ஆவணம் எழுதித் தர கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1, 2, 3 எதிரிகள் அ.சா.1 இடம் வங்கியில் ரூ.10 லட்சம் கடன் பெற்றுத் தருவதாக ஆசை வார்த்தை கூறியதாக உள்ளதில், எந்த வங்கி என்று எனது விசாரணையில் தனியார் வங்கி என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அந்த வங்கியின் பெயரை குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை. அ.சா.1, 1வது எதிரிக்கு 29.05.2018 ஆம் தேதி எழுதிக்கொடுத்த அதிகார ஆவணம் தேனி, சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். 01.06.2018 ஆம் தேதி 1வது எதிரி, 2ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் தேனி, சார்–பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணம் நம்பிக்கை மோசடியாக பதிவு செய்யப்பட்டதாக என் விசாரணையில் தெரியவந்தது. இந்த வழக்கின் புகாரை கொடுப்பதற்கு முன்பாகவே 2வது எதிரி தேனி சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது ஓ.எஸ். 208/2018 வழக்காக கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்தது வருவது எனக்குத் தெரியாது. அந்த வழக்கில் அ.சா.1, 2, 3 ஆகிய சாட்சிகள் 22.10.2018 ஆம் தேதி ஆஜராகியுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. புகாரில் மேற்படி உரிமையியல் வழக்கு நிலுவையில் இருந்து வரும் விபரத்தைக் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.2, அ.சா.1 இன் மனைவி என்றால் சரிதான். அ.சா.3, அ.சா.1. இன் மாமனார் என்றால் சரிதான். அ.சா.5 முருகன், அ.சா.6 பெருமாள், அ.சா.8 சேதுராமன் ஆகியோர்களிடம் அ.சா.1 முறையிட்டதாக இந்தப் பிரச்சனை சம்பந்தமாக பஞ்சாயத்து

நடந்ததாகவும் புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது விசாரணையில் அவ்வாறு பஞ்சாயத்து நடந்த விபரம் தெரியவந்தது. அ.சா.5, 6, 8 ஆகிய சாட்சிகள் இந்த வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகாரானது மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து வந்தவுடன் யாரையும் விசாரிக்காமல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தேனி காவல் நிலையக் குற்ற எண். 432/2018 என்ற வழக்கில் விசாரணை செய்தபோது, இந்த வழக்கின் விபரமும் தெரியவந்தது. அந்த வழக்கும் இந்த வழக்கும் தொடர்புடைய வழக்காகும். குற்ற எண். 432/2018 என்ற வழக்கானது மாண்புமிகு உய்ரநீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. சார்பதிவாளர் திரு. ஜெயபிரகாஷ் என்பவரை நான் 20.09.2019 ஆம் தேதி, அவரது அலுவலகத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்கள் வேண்டிய வேண்டுகோள் கடிதம் இந்த வழக்கு கோப்புடன் இணைக்கவில்லை. காவல்நிலையக் கோப்பில் உள்ளது. தேனி வட்டாட்சியர் அவர்களிடம் வருவாய் ஆவணங்கள் கோரி கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தை இந்த வழக்குக் கோப்புடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சென்ட்ரல் பேங்க் மேலாளர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களை நான் கடந்த 17.01.2019 ஆம் தேதி நான் போன் மூலமாக தொடர்பு கொண்டு விசாரித்தேன். சார்பதிவாளரையும், வங்கி மேலாளரையும் நான் நேரடியாக விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பின்னிட்டு அவ்வாறு விசாரித்ததாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கு, அ.சா.1 தரவேண்டிய கடன் பாக்கித் தொகையான ரூ.4,00,000/- மற்றும்

வங்கியில் செலுத்திய ரூ.1,96,000/– கடனிற்காகத்தான் அ.சா.1. எதிரிக்கு அதிகாரஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது செக்கியூரிட்டிக்காக எழுதிக்கொடுத்த ஆவணம். மேற்படி தொகையை இதுவரை அ.சா.1, 1 வது எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் அது பற்றி விபரம் தற்போது எனக்குத் தெரியாது. என் மேல்அதிகாரிகளின் வேண்டிகோளின்படி தவறாக வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 சுப்புராம் மற்றும் டி.எஸ்.பி. முத்துராஜ் என்பவர் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் டி.எஸ்.பியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகள் அ.சா.1 ஐ ஒருபோதும் ஏமாற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் எந்தவொரு ஆவணத்தையும் சட்டத்திற்கு விரோதமாக தயாரிக்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 தேனி, சார்பு நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக கடந்த 18.01.2019 ஆம் தேதி, அசல் வழக்கு எண். 31/2019 ஆக தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்து வருவது பற்றி தற்போது எனக்குத் தெரியாது. ஏற்கனவே உரிமையியல் வழக்குகள் நிலுவையில் இருந்து வரும் நிலையில், அ.சா.1. கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தயார்செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.